**<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**
<u>முன்னிலை : திரு.மு.ச.ஸ்ரீநாத்.,B.A.,B.L.,(Hons.) L.L.M.,</u>
<u>கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி.</u>

<u>2025ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 24 ஆம் நாள் புதன்கிழமை</u>
**<u>இ.ம.எண்.2/2023 இன் அ.வ.எண்.124/2023</u>**

S.துரையன் ... மனுதாரர்/வாதி

/ எதிர் /

வில்சன் *
(*எதிர்மனுதாரர் தரப்பில் தன் பெயர் ஆறுமுகம்
என கட்சி செய்யப்பட்டுள்ளது) .... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனுவானது கடந்த 23.09.2025 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.R.மகாதேவன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் திரு.B.செல்வக்குமார் அவர்கள் முன்னிலையாகியும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

**<u>ஆணையுரை</u>**

இம்மனுவானது மேற்படி தாவாவில் பிராதை திருத்தம் செய்ய உத்தரவு செய்யக்கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17–ன்படி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் தாவாவில் வாதி. மனுதாரர் மேற்படி எதிர்மனுதாரர் பேரில்

சுவாதீனம் மற்றும் பரிகாரங்கள் கோரி தாவா தாக்கல் செய்து மேற்படி தாவாவில் எதிர்மனுதாரருக்கு சம்மன் அனுப்ப உத்தரவாதி மேற்படி சம்மனை சமூகம் கோர்ட் அமீனா அவர்கள் எதிர்மனுதாரருக்கு சார்வு செய்ய சென்றதில் எதிர்மனுதாரர் தனது பெயர் மாறியிருப்பதை கூறி மேற்படி சம்மனை பெறாமல் திரும்ப அனுப்பிவிட்டார். மனுதாரர் தனது வழக்கறிஞர் மூலம் கடந்த 20.12.2022 அன்று எதிர்மனுதாரருக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதில் அதனை எதிர்மனுதாரருக்கு வில்சன் என்று கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டுள்ளார். மனுதாரர் அனுப்பிய மேற்படி 20.12.2022ம் தேதிய அறிவிப்பில் குறிப்பிட்டுள்ள சொத்து விவரத்தில் மேற்படி சொத்திற்குரிய மின் இணைப்பு எண்.675 என்றும் அதனையும் மேற்படி சொத்து விவரத்தில் சேர்த்து வாசித்துக் கொள்ள வேண்டுமாய் நான் எதிர்மனுதாரருக்கு கடந்த 10.01.2023 அன்று அறிவிப்பு அனுப்பியதில் மேற்படி அறிவிப்பினை எதிர்மனுதாரர் ஆறுமுகம் வில்சன் என்று கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டுள்ளார். மேற்படி அறிவிப்புகளுக்கு எதிர்மனுதாரர் பதில் எதுவும் அனுப்பவில்லை. எதிர்மனுதாரர் மேற்படி அறிவிப்புகளை வில்சன் என்றும் ஆறுமுகம் வில்சன் என்றும் மாற்றி மாற்றி கையொப்பமிட்டு பெற்றுக் கொண்டுவிட்டு தனது பெயர் தாவாவில் மாறி இருப்பதாக கோரி மேற்படி சமூகம் கோர்ட் சம்மனை பெறாமல் வேண்டுமேன்றே திருப்பி அனுப்பியுள்ளார். எதிர்மனுதாரரின் மேற்கண்ட செயலானது சமூகம் கோர்ட்டினை ஏமாற்றும் செயலாகும் என்றும் மேற்படி நெம்பர் எதிர்மனுதாரருக்கு சமூகம் கோர்ட் சம்மன் சர்வாக உத்திரவு செய்ய வேண்டுமாய் பரிகாரங்கள் கோரி IA 1/2023ல் மனு தாக்கல் செய்து மேற்படி மனு கடந்த 02.06.2023ம் தேதியன்று அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படி உத்திரவில் This Petition is allowed and the petition is liberty to file appropriate petition to amend the defendant's name. மேற்படி மனுவில் பிறப்பிக்கப்பட்டுள்ள உத்திரவின் படி பிராதை

திருத்தம் செய்ய வேண்டி இம்மனுவை தாக்கல் செய்துள்ளேன்.

3) <u>**எதிர்மனுதாரர் எதிருரை சுருக்கம்**</u>

(3.1) மனுதாரரின் மனு பொய்யானது. சட்டப்படியும் நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. மனுதாரர் தனது அபிடவிட்டில் குறிப்பிட்டுள்ள சங்கதிகளில் தான் வெளிப்படையாக ஒப்புக் கொள்ளும் சங்கதிகளைத் தவிர மற்றவற்றை இந்த எதிர்மனுதாரர் வன்மையாக மறுக்கிறார். அவற்றை மனுதாரரே நிரூபிக்க வேண்டியது. எதிர்மனுதாரர் தாழ்மையுடன் சமர்ப்பித்துக் கொள்வது யாதெனில் மனுதாரர் எதிர்மனுதாரருக்கு எதிராக தாவா சொத்துக்களை சுவாதீனம் கோரி O.S.No.124 of 2023 என்ற வழக்கைத் தாக்கல் செய்துள்ளார் என்ற விபரத்தை எதிர்மனுதாரர் ஒப்புக் கொள்கிறார்.

(3.2) எதிர்மனுதாரர் தாழ்மையுடன் சமாப்பித்துக் கொள்வது யாதெனில் மனுதாரர் தன்னை இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்று கூறியுள்ள நிலையில் தனது இளைய சகோதரரான எதிர்மனுதாரரின் மதம் "கிறிஸ்டியன்" என்று long cause title–ல் குறிப்பிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவர். அவர் கிறிஸ்டியன் மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்கோ, அவர் பெயர் வில்சன் என்பதற்கோ மனுதாரர் தரப்பில் சட்டப்பூர்வமான எந்தவித ஆவணங்களையும் தாக்கல் செய்யவில்லை. எதிர்மனுதாரர் இந்து மதத்தைச் சேர்ந்தவர் என்பதற்கும் அவரது பெயர் ஆறுமுகம் என்ற விபரத்தை நிரூபிக்கவும் தகுந்த சட்டப்பூர்வமான ஆவணங்களை சமூகம் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க தயாராக உள்ளார்.

(3.3) மேலும் மனுதாரர் தனது அபிடவிட்டில் அவரது வழக்கறிஞர்

அனுப்பிய அறிவிப்பை வில்சன் என்று கையொப்பம் செய்து எதிர்மனுதாரர் பெற்றுக் கொண்டார் என்று கூறியிருப்பது உண்மையல்ல. அஞ்சல் ஒப்புகை அட்டையில் வில்சன் என்று உள்ள கையெழுத்துகள் தன்னுடையது அல்ல என்றும், ஆறுமுகம் என்று கையொப்பம் இட்டதை வில்சன் என்று எழுத்தை யாரோ சேர்த்துள்ளார்கள் என்று எதிர்மனுதாரர் தாழ்மையுடன் சமர்ப்பித்துக் கொள்கிறார். மேலும் சமூகம் நீதிமன்றத்தால் அனுப்பப்பட்ட அறிவிப்பில் வில்சன் என்று பெயர் இருந்ததால், தனது பெயர் ஆறுமுகம் என்றும், எனவே அறிவிப்பைப் பெற இயலாது என்றும், அறிவிப்பு சார்பு செய்ய வந்த நீதிமன்ற அலுவலரிடம் தெரிவித்ததாகவும் எதிர்மனுதாரர் தாழ்மையுடன் சமர்ப்பித்துக் கொள்கிறார்.

(3.4) ஆகவே தான் இந்து மதத்தைச் சோந்தவர் என்றும், தனது பெயர் ஆறுமுகம் என்றும், வில்சன் அல்ல என்றும் எதிர்மனுதாரர் தாழ்மையுடன் சமர்ப்பித்துக் கொள்கிறார். எனவே எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள பிராது மற்றும் இடைக்கால மனு ஆகியவற்றில் தனது பெயரை "ஆறுமுகம்" என்றும், தனது மதம் "இந்து" என்றும் long cause title மற்றும் short cause title ஆகியவற்றில் உரிய திருத்தங்களை செய்ய மனுதாரருக்கு உத்தரவிட வேண்டுமாய் எதிர்மனுதாரர் தாழ்மையுடன் பிரார்த்திக்கிறார்.

**4)** இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில் இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும்.

**5)** இரு தரப்பும் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் எ.ம.சா.ஆ.1 முதல் எ.ம.சா.ஆ.4 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**6)** இருதரப்பு கட்சிகளும் கேட்டு வழக்காவணங்களை பரிசீலிக்கும்போது வாதியானவர் இம்மனுவினை பிரதிவாதியான எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பு செய்ய முற்பட்டபோது பெயர் மாறி இருப்பதாக அழைப்பாணை திருப்பப்பட்டதாக குறிப்பிட்டும், 20.12.2022 தேதிய வழக்கறிஞர் அறிவிப்பை வில்சன் என கையொப்பம் இட்டு பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டும், 10.01.2023 அன்று அனுப்பிய அறிவிப்பை ஆறுமுகம் வில்சன் என்று கையொப்பம் இட்டு பெற்றுக் கொண்டதாக குறிப்பிட்டும், இவ்வாறு எதிர்மனுதாரர் தன் பெயரை மாற்றி மாற்றி கையொப்பம் இட்டு அழைப்பாணை பெறுவதில் இருந்து வேண்டுமென்றே திருப்பி அனுப்பியுள்ளார் என்று குறிப்பிட்டும் இதுதொடர்பாக எதிர்மனுதாரருக்கு அழைப்பாணை சார்பாக உத்தரவு செய்ய I.A.1/2023 தாக்கல் செய்யப்பட்டு "This petition is allowed and the petitioner is liberty to file appropriate petition to amend the defendant's name" என்று இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டதாக குறிப்பிட்டும் பிரதிவாதியின் பெயரை மாற்ற இம்மனுவை தாக்கல் செய்திருப்பதாக தெரிய வருகிறது. மனுதாரர் தரப்பு வழக்கறிஞர் தன் வாதத்தின்போது IA 1/2023 ல் இந்நீதிமன்ற உத்தரவுப்படிதான் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் அதனால் இம்மனு அனுமதிக்கப்பட வேண்டும் என்றும் பிரதிவாதியின் பெயர் தொடர்பான பிரச்சனையை வழக்கு விசாரணையின்போது தீர்மானித்துக் கொள்ளலாம் என்றும் வாதிட்டார்.

(6.2) மறுமுனையில் எதிர்மனுதாரர் தரப்பில் தான் இந்துமதத்தைச் சேர்ந்த மனுதாரரின் தம்பியாக உள்ள நிலையில் மனுதாரர் தன்னை வழக்குரையில் கிறிஸ்துவ மதத்தைச் சார்ந்தவர் என்று குறிப்பிட்டுள்ளதாகவும் ஆனால் எதிர்மனுதாரர் தான் இந்து மதத்தைத்தான் சேர்ந்தவர் என்றும் தன் பெயர்

ஆறுமுகம்தான் என்றும் எதிர்மனுதாரர் கிறிஸ்தவர் என்பதற்கோ அவரது பெயர் வில்சன் என்பதற்கோ மனுதாரருக்கு சட்டப்பூர்வ ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும் வாதிடப்பட்டது. மேலும் மனுதாரர் குறிப்பிட்டுள்ள ஒப்புகை அட்டைகளில் உள்ள கையொப்பங்கள் எதிர்மனுதாரருடையது அல்ல என்றும் வாதிடப்பட்டது. எதிர்மனுதாரர் தரப்பில் தான் இந்து மதத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பதை காட்டும்விதமாக தன் அடையாள அட்டைகளை தன் தரப்பு சான்றாவணங்களாக தாக்கல் செய்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. அதனால் வழக்கு மற்றும் இடைக்கால மனு ஆகியவற்றில் எதிர்மனுதாரர் பெயரை "ஆறுமுகம்" என்றும் அவரது மதம் "இந்து" என்றும் திருத்தம் செய்ய உத்தரவிடுமாறு வேண்டப்படுவதாக பிரார்த்திக்கப்பட்டுள்ளது.

(6.3) இருதரப்பு கட்சிகளும் கேட்கப்பட்டு ஆவணங்களை பரிசீலிக்கும்போது இந்நீதிமன்றத்தின் IA.1/2023 –ல் மனுதாரர் பிரதிவாதி தன் பெயரை மாற்றி மாற்றி கையொப்பம் இடுவதாக குறிப்பிட்டு நீதிமன்ற அழைப்பாணை சார்பு செய்ய உரிய உத்தரவு கோரியே மனு செய்துள்ளது தெளிவாகிறது. அம்மனுவில் 02.09.2023 அன்று இந்நீதிமன்றம் கொடுத்த உத்தரவு பின்வருமாறு

“ Heard. Perused. Petitioner states that the defendant evading is evading court summons that his differs. Therefore the petition is allowed and the petition is liberty to file appropriate petition to amend the defendant name,’’

மேற்படி உத்தரவில் இந்நீதிமன்றம் பிரதிவாதியின் பெயரோ, மதமோ என்னவென்று தீர்மானிக்கவில்லை என்பது தெரிகிறது. மேலும் மேற்படி உத்தரவின்படி திருத்தம் செய்ய முறையான மனு செய்து கொள்ளவே அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே மேற்படி உத்தரவின் அடிப்படையில் மட்டுமே

இம்மனு அனுமதிக்கத்தக்கது என்ற வாதம் ஏற்புடையதல்ல. மனுதாரர் தரப்பிலும் பிரதிவாதியின் சரியான பெயர் இன்னதென்று நிரூபிக்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

(6.4) இம்மனுவில் எதிர்மனுதாரராக ஆஜராகி தன் பெயரை ஆறுமுகம் என கோரும் நபர்தான் வாதி தன் வழக்கில் பிரதிவாதி ஆக காட்டும் நபர் என்பதை மனுதாரர் தரப்பில் ஆட்சேபிக்கவில்லை. பிரதிவாதியின் பெயரையோ, மதத்தையோ காட்டும் விதமாக மனுதாரர் தரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை. வெறுமனே ஒப்புகை அட்டைகளில் பிரதிவாதி தன் பெயரை மாற்றி மாற்றி கையொப்பம் இட்டதாக மட்டுமே குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய ஒப்புகை அட்டைகள் தாக்கல் செய்யப்பட்டாலும் அது பிரதிவாதியின் அசல் பெயரை தீர்மானிக்க போதுமானதாக அமையாது. மறுமுனையில் எதிர்மனுதாரர் தன் பெயரை நிரூபிக்க தனது ஆதார் அட்டையை பி.வா.சா.ஆ.1 ஆகவும், தனது குடும்ப அட்டையை பி.வா.சா.ஆ.2 ஆகவும், தனது மகன் ஜெயின்ராஜ்–ன் சாதிச்சான்று பி.வா.சா.ஆ.3 ஆகவும், தனது ஓட்டுநர் உரிமம் பி.வா.சா.ஆ.4 ஆகவும் குறியீடு செய்துள்ளார். மேற்படி ஆவணங்களில் எதிர்மனுதாரரின் பெயர் ஆறுமுகம் என்றே உள்ளது. அந்த ஆவணங்களில் எதிர்மனுதாரருக்கு வில்சன் என்ற மாற்றுப்பெயர் இருப்பதாகவோ ஆறுமுகம் வில்சன் என்ற பெயர் இருப்பதாகவோ குறிப்பு இல்லை. மேற்படி ஆவணங்களின் அடிப்படையில் எதிர்மனுதாரர்/பிரதிவாதி பெயர் ஆறுமுகம் என்பதைக் காண முடிகிறது. இந்நிலையில் வாதி கோரியவாறு வழக்குரையில் பிரதிவாதியின் பெயரை ஆறுமுகம் வில்சன் என மாற்றுவது நீதியின்பால் உகந்ததாகவோ முறையானதாகவோ இல்லை எனக் கருதி இம்மனுவை தள்ளுபடி செய்யலாம் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

இறுதியில், இம்மனு தள்ளுபடி செய்யப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இவ்வுத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2025ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 24ஆம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/.....(மு.ச.ஸ்ரீநாத்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

**மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் :** இல்லை

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் :** இல்லை
**எதிர்மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**

| ஆவண எண் | தேதி | ஆவணத்தின் பெயர் | ஆவணத்தின் தன்மை |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ.1 | – | எதிர்மனுதாரர் ஆதார் அட்டை | நகல் |
| எ.ம.சா.ஆ.2 | – | எதிர்மனுதாரர் குடும்ப அட்டை | நகல் |
| எ.ம.சா.ஆ.3 | – | எதிர்மனுதாரர் மகனின் சாதிச்சான்று | நகல் |
| எ.ம.சா.ஆ.4 | – | எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் | நகல் |

ஒம்/.....(மு.ச.ஸ்ரீநாத்)
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
பொள்ளாச்சி.

---------------------------------------

**அசல் / வரைவு ஆணையுரை**

இ.ம.எண்.02/2024 இன் அ.வ.எண்.124/2023

நாள் : 24.09.2025

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---------------------------------------